## தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2009
## அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்

**இணைப்பு: 11**

### கவிதை மனனப் போட்டி - பாலர் பிரிவு (3 - 4 வயது)

(பிறந்த திகதி: 01.07.2004- 30.06.2006)

### ஓடி விளையாடு பாப்பா

ஓடி விளையாடு பாப்பா – நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா – ஒரு
குழந்தையை வையாதே பாப்பா

தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
அமிழ்தில் இனியதடி பாப்பா – எங்கள்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா.

- (மஹாகவி சுப்பிரமணிய பாரதியார்)

---

### கவிதை மனனப் போட்டி – ஆரம்பப் பிரிவு ( 5 வயது)

(பிறந்த திகதி: 01.07.2003 - 30.06.2004)

### தமிழ் வாழ்கவே!

தமிழ் வாழ்கவே தமிழ் கலைவாழ்கவே
தமிழ் பேசும் சமுதாயம் நிலையான புகழோடு
தரணி எங்கும் வாழ்கவே

அழகான பொன்னாடு நமதீழ நன்னாடு
அதை என்றும் நாம் வாழ்த்திப் பாடுவோமே
அவுஸ்திரேலி யநாடு நாம் வாழும் இந்நாடு
அதில் எங்கள் தமிழ்பேசி ஆடுவோமே

வீடுகள் தோறும்தேன் மொழி பேசுவோம் கூடி
விளையாடுவோம் தமிழ் இசை பாடுவோம்
ஆடுவோம் நண்பர்கள் கூடுவோம் தமிழர்கள்
அனைவரும் தமிழினில் உரையாடுவோம்

- பாடும்மீன் சு.ஸ்ரீகந்தராசா

**தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2009**
**அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்**

# கீழ் பிரிவு ( 6 - 7 வயது)

(பிறந்த திகதி: 01.07.2001 - 30.06.2003)

## தமிழ்

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்குங் காணோம்
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமை எனில் வெளிநாட்டோர்
அதைவணக்கம் செய்தல் வேண்டும்.

- (மஹாகவி சுப்பிரமணிய பாரதியார்)

---